**நாள்: 02.12.2021**

**<u>அசல் வழக்கு எண்:67/2016</u>**

<u>பி.சா.1 முன்னிலை சத்தியபிரமாணம் செய்யப்பட்டதன்பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை-</u>

வழக்கு சொத்தின் சர்வே நம்பர் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண் என்னவென்றால் சர்வே எண்.199ஏபி /8. அதன் விஸ்தீரணம் என்னவென்றால் எனக்கு தெரியாது. 2வது அயிட்ட வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண்.199ஏபி/14. 2அயிட்ட சொத்தின் விஸ்தீரணம் என்னவென்றால் எனக்கு தெரியாது. வாதி தனலெட்சுமி வழக்கு சொத்தை பூங்கோதை, சசிகுமார், செந்தில்குமார், அசோக்குமார் ஆகியோரிடமிருந்து 2014ம் ஆண்டு கிரயம் வாங்கிய விவரம் தெரியுமா என்றால் தெரியும் எங்களுக்கு சொந்தமான சொத்தின் சர்வே எண் என்னவென்றால் சர்வே எண்.199ஏபி/9பி. எனது மகன் எங்களுக்கு சொந்தமான சொத்தை கடந்த 07.09.2015 அன்று சேகர், ரதி ஆகியோரிடமிருந்து கிரயமாக வாங்கினார் என்றால் சரிதான். எனது மகன் கிரயம் வாங்கியதற்கான கிரய ஆவணம் என்னிடம் காண்பிக்கப்படும் பி.சா.ஆ.1 என்றால் சரிதான். அந்த கிரய ஆவணத்தில் சொத்து விவரத்தில் சர்வே எண்.199ஏபி/9பி-ன் விஸ்தீரணம் 0.09.5 ஏர்ஸ்க்கு செண்ட் 24 (72 குழி) என உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் வாதி தனலெட்சுமி, பூங்கோதை, சசிகுமார், செந்தில்குமார், அசோக்குமார் ஆகியோரிடமிருந்து கிரயம் வாங்கியதற்கான ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் வழக்கு சொத்து விவரத்தின் 1 அயிட்ட சொத்தில் சர்வே எண்,199ஏபி/8-ல் 0.11.5 ஏர்ஸ்க்கு செண்ட் 28 என உள்ளது என்றால் சரிதான் அது அண்ணன் தம்பி சொத்து சேகருக்கு 81 குழி பாகமாக கிடைத்தது அவருடைய அனுபவத்தின் அடிப்படையில் நாங்கள் வாங்கினோம். எங்கள் தரப்பில் சேகருக்கு பாகமாக கிடைத்தது என்பதை காண்பிக்க ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பி.சா.ஆ. 1 ஆவணத்தில் எங்களுடைய கிரய ஆவணத்திலாவது சேகருக்கு எந்த தேதியில் 81குழி சொத்து பாகபிரிவினையாக கிடைத்தது என குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.3 ஆவணத்தில் வழக்கு

சொத்துக்கு வாதி பெயரில் கொடுக்கப்பட்ட சிட்டா அடங்கல் என்றால் இந்த ஆவணத்தில் வாதி அனுபவப்படி வாங்கிய சொத்தை காண்பிக்காமல் அளவை கூடுதலாக செய்து வாங்கியுள்ளார். பி.சா.ஆ.1 ஆவணத்தின்படி 72 குழி சொத்து வாங்கியுள்ளீர்கள் என்றால் சேகர் பாகப்பிரிவு அனுபவத்தின்படி 81 குழி வாங்கியுள்ளோம். பி.சா.ஆ.1 ஆவணத்தின்படி 72குழிக்குதான் பத்திரப்பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். எங்களுக்கு அரசாங்கத்தால் தற்போது கொடுக்கப்பட்டுள்ள பட்டா, சிட்டா அடங்கல் ஆகியவற்றில் சர்வே எண்.199ஏபி/ 9பி-ல் 72 குழி குறித்துதான் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் குறிப்பிடும் கூடுதலாக உள்ள 9 குழி நிலத்திற்கு சட்டப்படி பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் ஏதும் வாங்கியுள்ளேனா என்றால் இல்லை சேகருக்கு பாகமாக வந்த இடத்தை எங்களுக்கு வெண்ணிலை பத்திரத்தின் மூலம் எழுதிக்கொடுத்தார். எங்களுக்கு விற்பனை செய்தபோது உள்ளிக்கோட்டை சார்பதிவகத்தில் சேகர் தரப்பில் தாக்கல் செய்துள்ள கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சிட்டா அடங்களில் சர்வே எண்.199ஏபி/9பி-ல் 0.09.5 ஏர்ஸ் என குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணத்தில் 81 குழி எங்களுக்கு சொந்தம் என்றும் 72 குழிக்கு மட்டுமே கிரயம் செய்யப்பட்டுள்ளது என்றும் மீதமுள்ள 9 குழி வெண்ணிலை பாகபத்திரமாக உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை நாங்கள் கேட்டோம் அதுபோல் பத்திரத்தில கண்டு எழுதமுடியாது நீங்கள் தனியாக பாகவீத வெண்ணிலை பத்திரமாக எழுதிக்கொள்ளுங்கள் என பத்திரம் எழுதியவர் கூறினார்.

வாதி வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.